# ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2024.06.28 |


## கட்டடவாக்கத் தொழிற்துறைக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் - 2024 மே

**கட்டடவாக்கத்திற்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் (கொ.மு.சு - கட்டடவாக்கம்), 2024 மேயில் 54.5 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, கட்டடவாக்க நடவடிக்கைகளில் மேம்படுதலை எடுத்துக்காட்டியது.** முன்னைய மாதத்தின் நீண்ட விடுமுறை நாட்களுக்குப் பின்னர் பல கட்டடவாக்க செயற்றிட்டங்கள் மேயில் வழமைக்கு திரும்பின. எவ்வாறாயினும், நிலவிய பாதகமான வானிலை நிலைமைகள் எதிர்பார்க்கப்பட்ட மேம்படுதலை தடைபடுத்தின என பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

புதிய கட்டளைகள், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மேயில் சிறிதளவு அதிகரித்தன. அளவீட்டில் பங்கேற்றவர்கள் குறிப்பிடுவதற்கமைய, வீதி கட்டடவாக்க செயற்றிட்டங்களே தற்போது அநேகமாக கிடைக்கத்தக்க விலைக்கோரல்களாகக் காணப்படுகின்றன. கட்டடவாக்க தொழிற்றுறையை தூண்டுவதற்கு பாரிய உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களின் அவசியத்தை அவர்களில் அநேகமானோர் வலியுறுத்தினர். அதேவேளை, ஆட்சேர்ப்புத் தொடர்பில் நிறுவனங்கள் அவதானத்துடன் காணப்பட்டமையினால், மேயில் தொழில்நிலை குறைவான வேகத்திலேனும் தொடர்ச்சியாக சுருக்கமடைந்தது. மேலும், கொள்வனவுகளின் அளவு முன்னைய மாதத்தில் காணப்பட்டதைப் போன்று அதேமட்டத்தில் காணப்பட்டது. கட்டவாக்கம் தொடர்புபட்ட பொருட்களின் விலை மட்டங்கள் தொடர்ச்சியாக மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்ததென பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். இது, கைத்தொழில் துறைக்கு ஆக்கபூர்வமானதாகக் காணப்படுகின்றது. அதேவேளை நிரம்பலர்களின் விநியோக நேரம் மே மாதத்திலும் நீட்சியடைந்து காணப்பட்டது.

**கொமுசு தொகுப்பு: கட்டடவாக்க அளவீடு**


| மாறி | மாச் | ஏப் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – கட்டடவாக்கம் (மொத்த நடவடிக்கைச் சுட்டெண்)** | **31.9** | **54.5** | + | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிகின்றது** |
| புதிய கட்டளைகள் | 37.5 | 51.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிகின்றது |
| தொழில்நிலை | 38.9 | 39.4 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் அளவு | 29.2 | 50.0 | + | வீழ்ச்சியிலிருந்து நடுநிலை |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 51.4 | 51.5 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கிடைக்கத்தக்க செயற்றிட்டங்களின் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பின் பிரதான காரணமாக அடுத்த மூன்று மாதங்களுக்கான கட்டடவாக்க நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சாதகமாகக் காணப்படுகின்றன.

**கொமுசு**
**கட்டடவாக்கம்**
**மொத்த நடவடிக்கைச் சுட்டெண்**
**2024 மே**
**54.5**

கட்டடவாக்க கொ.மு.சு மொத்த நடவடிக்கைச் சுட்டெண்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு தொகுப்பு - கட்டடவாக்கம்

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| யூரோ வலயம் | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| பிரான்ஸ் | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| ஜேர்மனி | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| அயர்லாந்து | அதிகரிப்பிலிருந்து நடுநிலை |
| இத்தாலி | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2024 யூன் 27 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1] எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**முறையியல்**
சுட்டெண் தொகுப்பும் சுட்டெண்கள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண் என்பது பன்னாட்டு சிறந்த நடத்தைகளின் பிரகாரம் **கொமுசு – கட்டடவாக்கம்** என குறிப்பீடு செய்யப்படுகின்ற கட்டடவாக்கத்திற்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**
மாதத்திற்கு மாத அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுப்பாளர்களை உள்ளடக்கி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்த அதிகூடிய தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்கக் கம்பனிகளை இலக்காகக் கொண்டு அளவீடு நடாத்தப்படுகின்றது.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் அளவு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.